பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 03 2024 7 15

வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது.

2. நிலையான வளர்ச்சியை எட்ட பாலின சமத்துவமும், பெண்களுக்கான பொருளாதார அதிகாரமும் முக்கியமானவை என குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

3. இந்தியாவும் - மலேசியாவும் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பைமேலும் வலுப்படுத்த முடிவு செய்துள்ளன.

4. யுக்ரைன் வெளியுறவு அமைச்சர் திரு. டிமிட்ரோ குலேபா இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

5. ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 மக்களவைத் தொகுதிகளுக்கும், மணிப்பூரில் ஒரு மக்களவைத் தொகுதியின் சில பகுதிகளுக்கும் இரண்டாம் கட்ட தேர்தலின்போது வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

கேரளாவில் 20 தொகுதிகள், கர்நாடகாவில் 14 தொகுதிகள், ராஜஸ்தானில் 13 தொகுதிகள், உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 8 தொகுதிகள், மத்திய பிரதேசத்தில் 7 தொகுதிகள், அசாம் மற்றும் பீகாரில் தலா 5 தொகுதிகள், மேற்கு வங்கம் மற்றும் சத்தீஸ்கரில் தலா 3 தொகுதிகள், திரிபுரா மற்றும் ஜம்மு-காஷ்மீரில் தலா 1 தொகுதியில் இரண்டாம் கட்ட தேர்தலின்போது வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த தொகுதிகளில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய ஏப்ரல் 4ஆம் தேதி கடைசி நாளாகும்.

ஜம்மு-காஷ்மீரைத் தவிர மற்ற இடங்களில் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 5 ஆம் தேதி நடைபெறும்.

ஜம்மு காஷ்மீரில் மட்டும் ஏப்ரல் 6-ம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலனை நடைபெற உள்ளது.

இந்த 88 தொகுதிகளிலும் ஏப்ரல் 26-ந் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

<<<<>>>>

மக்களவைக்கு முதல் கட்டமாக தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

நாடு முழுவதும் 17 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் 102 தொகுதிகளில் ஏப்ரல் 19ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

பீகாரில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளைத் தவிர மற்ற தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நேற்று நிறைவடைந்தது.

வேட்பு மமனுக்களை திரும்பப்பெற 30-ம் தேதி கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலத்தில் முதற்கட்டமாக நாக்பூர், ராம்டெக், சந்திரபூர், பண்டாரா-கோண்டியா மற்றும் கட்சிரோலி-சிமூர் ஆகிய 5 தொகுதிகளில் தேர்தல் நடைபெறுகிறது.

இந்த ஐந்து தொகுதிகளிலும் 229 பேர் மனு தாக்கல் செய்துள்ளனர். இதில் 183 வேட்பாளர்கள் நேற்று மனுதாக்கல் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாக்பூர் தொகுதியில் பிஜேபி சார்பில் திரு நிதின் கட்கரியும், காங்கிரஸ் சார்பில் திரு விகாஸ் தாக்கரேவும் போட்டியிடுகின்றனர்.

<<<<>>>>

பீகாரில், முதல் கட்டமாக மக்களவைத் தேர்தல் நடைபெறும் கயா, அவுரங்காபாத், நவாடா மற்றும் ஜமுய் ஆகிய நான்கு தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் முடிவடைகிறது.

வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை 30 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

ஹோலி பண்டிகை மற்றும் பீகார் மாநில தினம் போன்ற விடுமுறை நாட்கள் காரணமாக மனு தாக்கலுக்கான கடைசி தேதி ஒருநாள் நீட்டிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

<<<<>>>>

அசாமில் முதல் கட்டமாக மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள 5 மக்களவைத் தொகுதிகளில் 38 வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

நேற்று ஒரே நாளில் 26 பேர் மனு தாக்கல் செய்ததாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

திப்ருகார், ஜோர்ஹாட், லக்கிம்பூர், சோனித்பூர் மற்றும் காசிரங்கா ஆகிய தொகுதிகளில் ஏப்ரல் 19-ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

<<<<>>>>

சிக்கிமில் உள்ள ஒரு மக்களவைத் தொகுதிக்கு அடுத்த மாதம் 19ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவின்போது தேர்தல் நடைபெறவுள்ளது.

அத்துடன் 32 உறுப்பினர்களைக் கொண்ட மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது.

மனுதாக்கல் செய்ய கடைசி நாளான நேற்று மாநில முதலமைச்சரும், ஆளும் சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா கட்சித் தலைவருமான பிரேம் சிங் தமாங் மற்றும் முன்னாள் முதல்மைச்சரும் சிக்கிம் ஜனநாயக முன்னணி தலைவருமான திரு பவன் குமார் சாம்லிங் ஆகியோர் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தனர்.

<<<<>>>>

ஜம்மு-காஷ்மீரில், முதல் கட்டமாக ஏப்ரல் 19ஆம் தேதி மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள உதம்பூர் தொகுதியில் மொத்தம் 15 வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

நிறைவு நாளான நேற்று மட்டும் எட்டு வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பேர் அடங்கிய மற்றொரு வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

ஆந்திர சட்டப் பேரவைத் தேர்தலுக்கான 10 வேட்பாளர்களின் பெயர்களையும் பிஜேபி அறிவித்துள்ளது. கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய இணை அமைச்சருமான திரு ஒய்.எஸ்.சவுத்ரி விஜயவாடா சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் 14 வேட்பாளர்கள் அடங்கிய மற்றொரு பட்டியலை காங்கிரஸ் கட்சி நேற்று இரவு வெளியிட்டுள்ளது.

காசியாபாத் மக்களவைத் தொகுதியில் திரு டோலி சர்மாவும், உத்தரப்பிரதேசத்தின் சீதாபூர் தொகுதியில் திரு. நகுல் துபேவும் போட்டியிடுவார்கள் என அக்கட்சி அறிவித்துள்ளது.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்படுவதாக அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு மணீஷ் கார்க் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் தேர்தலுக்காக மொத்தம் 7 ஆயிரத்து 990 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

மாநிலத்தில் 56 லட்சத்து 38 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளதாகவும் மே 4ஆம் தேதி வரை புதிய வாக்காளர்கள் தங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாநிலத்தில் ஜூன் ஒன்றாம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

<<<<>>>>

ஒடிசாவில் மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல் கட்ட வேட்பாளர் பட்டியலை பிஜு ஜனதா தள் கட்சி வெளியிட்டுள்ளது.

அக்கட்சியின் தலைவரும் ஒடிசா முதலமைச்சருமான திரு நவீன் பட்நாயக், மாநிலத்தில் உள்ள 21 மக்களவைத் தொகுதிகளில் 15 தொகுதிகளுக்கு வேட்பாளர்களின் பெயர்களை நேற்று அறிவித்தார்.

மாநிலத்தில் 147 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 72 தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் திரு நவீன் பட்நாயக் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ஹிஞ்சிலி சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

4, 5, 6 மற்றும் 7-வது கட்ட வாக்குப்பதிவின்போது ஒடிசாவில் மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது.

<<<<>>>>

குஜராத்தின் கர்பா நடனத்தின் புகழ் உலக அளவில் அதிகரித்து வருவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், யுனெஸ்கோவின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் கர்பா நடனம் அண்மையில் இடம்பெற்றதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பாரிசில் மறக்க முடியாத கர்பா நிகழ்ச்சி கடந்த சில நாட்களுக்கு முன்பு நடைபெற்றதை அவர் புகைப்படங்களுடன் பதிவிட்டுள்ளார்.

அதில் இந்திய சமூகத்தினர் பெருமளவில் பங்கேற்றதை அவர் குறிப்பிட்டுள்ளார்.

கர்பா என்பது வாழ்க்கை, கலாச்சாரம் மற்றும் பக்தியின் கொண்டாட்டம் என்றும், இது மக்களை ஒன்றிணைக்கிறது என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நிலையான வளர்ச்சியை எட்ட பாலின சமத்துவமும் பெண்களுக்கான பொருளாதார அதிகாரமும் முக்கியமானவை என குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பின் மகளிர் பிரிவின் 40-ம் ஆண்டு விழா புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய குடியரசுத் துணைத் தலைவர் பாலின சமத்துவமும் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியும் முற்போக்கான சமூகத்தின் அடிப்படைக் கொள்கைகள் என்று கூறினார்.

மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது பெண்களுக்கான உரிய இடம் சமூகத்தில் உறுதி செய்யப்படுவதாக திரு ஜெக்தீப் தன்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவும் மலேசியாவும் பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடிவு செய்துள்ளன.

அரசு முறைப் பயணமாக மலேசியா சென்ற வெளியுறவு அமைச்சர் திரு எஸ்.ஜெய்சங்கர் நேற்று கோலாலம்பூரில் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை சந்தித்துப் பேசினார்.

பாரம்பரிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் இந்தியா-மலேசியா உறவுகளை வலுப்படுத்துவது குறித்து மலேசிய பிரதமருடன் பேச்சு நடத்தியதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

மலேசிய வெளியுறவு அமைச்சர் திரு முகமது ஹாஜி ஹசனையும் திரு ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

பொருளாதாரம், பாதுகாப்பு, டிஜிட்டல் மேம்பாடு, புத்தொழில் நிறுவனங்கள், மக்களுக்கு இடையேயான இணைப்புகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து அவர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

கோலாலம்பூரில் உள்ள இந்திய சமூகத்தினருடன் திரு ஜெய்சங்கர் கலந்துரையாடினார்.

<<<<>>>>

யுக்ரைன் வெளியுறவு அமைச்சர் திரு டிமிட்ரோ குலேபா இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

வெளியுறவு அமைச்சர் திரு எஸ். ஜெய்சங்கரின் அழைப்பை ஏற்று அவர் இந்தியா வருகிறார்.

இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, மண்டல மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்து திரு. ஜெய்சங்கர் உடன் அவர் ஆலோசனை நடத்தவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா வர்த்தக பிரதிநிதிகளுடனும் யுக்ரைன் அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

தமது இந்திய பயணத்துக்கு முன்னதாக இது குறித்து கீவ் நகரில் செய்தியாளர்களிடம் பேசிய திரு டிமிட்ரோ குலேபா, இந்தியா ஒரு பலம்வாய்ந்த சர்வதேச சக்தியாக திகழ்கிறது என்று கூறினார்.

கடந்த 7 ஆண்டுகளில் யுக்ரைன் வெளியுறவு அமைச்சர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

<<<<>>>>

ராணுவ உயர் அதிகாரிகள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இந்த மாநாட்டில் வரும் 2-ம் தேதி பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உரையாற்றுகிறார்.

<<<<>>>>

ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர் கனடாவின் **Ven Yu**-வை 21-16, 21-12 என்ற செட் கணக்கில் வென்றார்.

<<<<>>>>